**செய்தி வெளியீடு எண்: 852** **நாள்: 29.11.2019**

**இன்று (29.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் செங்கல்பட்டில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தினைத் தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட எல்லையிலிருந்து விழா நடைபெறும் இடம் வரை, ஏறக்குறைய 7 கிலோ மீட்டர் தூரமும் மக்கள் வெள்ளமாகக் குழுமி வரவேற்றக் காட்சியைக் கண்டபோது, மக்கள் ஆரவாரத்தோடு, எழுச்சியோடு இருப்பதைப் பார்க்கின்றபொழுது, இந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்கு எந்தளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

செங்கல்பட்டுப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 37வது மாவட்டமாக உதயமாகும் செங்கல்பட்டு மாவட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதிலும், சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது மக்களை நாடிச் சென்று உதவிக்கரம் நீட்டுவதிலும், மாண்புமிகு அம்மா அவர்களைப் போலவே, மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே பணியாற்றி வருகின்றது.

**“மக்களுக்கு சேவைகள் விரைந்து கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிர்வாக அலுவலர்களை நியமித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது”** என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் பெரிய மாவட்டங்களைப் பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன்

அடிப்படையில், சட்டமன்ற விதி 110ன் கீழ் 18.7.2019 அன்று என்னால் அறிவிக்கப்பட்டு, இன்று புதிய செங்கல்பட்டு மாவட்டம் தொடங்கப்படுகிறது என்பதை இங்கே பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பு, செங்கல்பட்டு நகரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டன. நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, செங்கல்பட்டு மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவு தலைமையகம் மட்டும் சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகையில் செயல்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் ஆன பிறகு, 1968–ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையிடத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றினார். பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்து, விரிந்த மாவட்டமாக இருப்பதால், செய்யூர், மதுராந்தகம், திருப்போரூர், பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்து கொள்ள செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என பல ஆண்டுகளாக இந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

“**மக்களை நாடி அரசு**” என்ற புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில், ஒவ்வொரு பகுதியின் மீதும் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், அரசின் நலத் திட்ட உதவிகள் விரைவில் மக்களை சென்றடைய வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மாவின் அரசு, காஞ்சிபுரம் மாவட்டத்தை பிரித்து புதிதாக செங்கல்பட்டு மாவட்டத்தை மக்களின் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

புதிய செங்கல்பட்டு மாவட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக செங்கல்பட்டு நகரம் விளங்கும். இம்மாவட்டம் 2,945 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 25 லட்சத்து 56 ஆயிரத்து 244 ஆகும்.

இம்மாவட்டத்தில் செங்கல்பட்டு, மதுராந்தகம், தாம்பரம் ஆகிய மூன்று வருவாய் கோட்டங்களும், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், செங்கல்பட்டு, செய்யூர், திருப்போரூர், தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் ஆகிய 8 வட்டங்களும், 40 உள் வட்டங்களும், 636 வருவாய் கிராமங்களும் உள்ளடங்கியுள்ளன. மதுராந்தகம், செங்கல்பட்டு, மறைமலை நகர், பல்லாவரம், தாம்பரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய 8 நகராட்சிகளும், அச்சரப்பாக்கம், லத்தூர் உட்பட 8 ஊராட்சி ஒன்றியங்களும், மாமல்லபுரம், சிட்லப்பாக்கம் உட்பட 12 பேரூராட்சிகளும், 359 கிராம ஊராட்சிகளும் உள்ளடங்கியுள்ளன.

இங்குள்ள நீர்நிலைகளில் செங்கழுநீர் மலர் பூத்துக் குலுங்கியதால் செங்கழுநீர்பட்டு என்று முதலில் அழைக்கப்பட்டு, பின்னர் அதுவே செங்கல்பட்டு என்று மருவியது என்று கூறுவர். செங்கல்பட்டு, பல்லவர் காலத்தில் உருவான பழமையான நகரமாகும். இங்கு மூன்று பக்கம் மலைகளும், ஒரு பக்கம் கொளவாய் ஏரியும் உள்ளது. இம்மாவட்டத்தில் ஏரிகள் அதிகமாக உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் ஏரி தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் வேளாண்மைக்கு இணையாக அதிக அளவில் தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் இடம் பெற்றுள்ளன. கல்பாக்கம் அணுமின் நிலையம் இம்மாவட்டத்தில்தான் உள்ளது.

பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுர கற்கோயில்கள், தமிழர்களின் கலை நுணுக்கத்தை பறைசாற்றும்படியாக அமைந்துள்ளன. பல்லவர் காலத்துக்குப் பிறகு, விஜயநகர அரசர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு திருமால் கோயிலும் மாமல்லபுரத்தில் உள்ளது. கோவர்த்தன சிற்பத் தொகுதியின் மீது அமைக்கப்பட்ட கிருஷ்ண மண்டபம், அர்ச்சுனன் தபசு, கடற்கரைக் கோயில், ஐந்து ரதக் கோயில்கள் மற்றும் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க படைப்புகளாகும். ஒரு முறை நரசிம்மவர்மன் என்ற மாமல்லர் தனது தந்தையுடன் உலா சென்றபோது ஒரு பாறையின் மீது யானையின் படம் வரைந்தார். அதைப் பார்த்த பிறகு தான் அவர் தந்தைக்குப் பாறைகளில் அழியாக் கோயில்கள் கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால் அவர் பெயரையே அந்த நகருக்கு இட்டார். மாமல்லபுர நினைவுச் சின்னங்களை உலகப் பண்பாட்டுச் சின்னம் என்று 1984ல் யுனெஸ்கோ அறிவித்தது. மகாபலிபுரத்தில் மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும்,

அப்போதைய சீன பிரதமரும் **1956–**ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **6**ஆம் நாளில் வருகை புரிந்துள்ளனர். ஏறக்குறைய **63** வருடங்களுக்குப் பிறகு **11.10.2019** மற்றும் **12.10.2019** ஆகிய தினங்களில் மாண்புமிகு பாரத பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் ஆகியோரிடையே வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கான அனைத்து பாதுகாப்பு மற்றும் வரவேற்பு போன்ற ஏற்பாடுகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஆகவே, உலகத் தலைவர்கள் சந்தித்த பகுதி தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம் என்னும் மாபெரும் பெருமையை நாம் பெற்றுள்ளோம்.

மன அமைதி தரும் ஸ்ரீ அகோர வீரபத்திரர் கோயில் இருக்கும் ஹனுமந்தபுரம், நலம் யாவும் தரும் ஸ்ரீநந்தீஸ்வரர் இருக்கும் நந்திவரம், நரசிம்மர் கோயில் இருக்கும் சிங்கப்பெருமாள் கோயில், நித்ய கல்யாண பெருமாள் வீற்றிருக்கும் திருவிடந்தை, குளத்திலிருந்து சங்கு வெளிப்படும் திருக்கழுக்குன்றம், ஹயக்கிரீவர் கோயில் இருக்கும் செட்டிபுண்ணியம், சிவன் கோயில் இருக்கும் அச்சரப்பாக்கம் ஆகிய திருக்கோயில்கள் இந்த மாவட்டத்தின் பெருமையை இன்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், மதுராந்தகம் பகுதியில் அடை மழை பெய்து, மதுராந்தகம் ஏரி உடைந்து விடும் சூழ்நிலை வந்ததாகவும், அப்போது ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவர் ஏரியை பலப்படுத்தும் முயற்சி எடுக்க அப்பகுதிக்கு வந்தார் என்றும், அச்சமயம் அருள்மிகு கோதண்டராமரே அந்த ஏரியை பாதுகாத்து வருகின்றதை அவர் கண்டதாகவும் வரலாறு கூறுகிறது. எனவே அக்கோயில் ‘‘ஏரி காத்த ராமர் கோயில்’’ என்று பெயர் பெற்றது.

தென்திருவேங்கடம் என்று அழைக்கப்படும் திருமலை வையாவூர் இந்த மாவட்டத்தில் தான் உள்ளது. இங்கு உள்ள மலை மீது அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். முருகப்பெருமான் நிலம், ஆகாயம், கடல் ஆகிய மூன்று பகுதிகளில் நின்று அசுரனை போரிட்டு வெற்றி கண்டார். இவ்வகையில் அசுரர்களின் ஆணவத்தை விண்ணில் நின்று முருகப்பெருமான் அடக்கி, ஒடுக்கிய இடமே இம்மாவட்ட திருப்போரூரில் உள்ள திருத்தலம் ஆகும் என ஸ்தல வரலாறு கூறுகிறது.

இங்குள்ள வேடந்தாங்கலுக்கு கனடா, சைபீரியா, வங்களாதேசம், பர்மா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் பறவைகள் வருகின்றன.

அக்டோபர் முதல் மார்ச் வரையிலான பருவத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் இங்கு தங்கி இனப்பெருக்கம் செய்கிறது. எனவே, பறவைகள் சரணாலயத்திற்குப் புகழ்பெற்ற வேடந்தாங்கல், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது தமிழகத்திற்கு பெருமை சேர்க்கிறது. கோவளம் கடற்கரை, முட்டுக்காடு படகு குழாம், முதலியார்குப்பம் படகு குழாம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா போன்ற சுற்றுலாத் தலங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. இந்திய தலைநகருக்கு வெளியே, முதன்முறையாக இம்மாவட்டத்தில் உள்ள திருவிடந்தையில் 2018, ஏப்ரல் 11 முதல் 4 நாட்கள் **“இராணுவக் கண்காட்சி–2018”** சிறப்பான முறையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இக்கண்காட்சிக்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளையும் மேற்கொண்டதற்காக மத்திய அரசின் பாராட்டுதலையும் பெற்றது.

இதுபோன்ற எண்ணற்ற சிறப்புகளைக் கொண்ட மாவட்டம் செங்கல்பட்டு மாவட்டமாகும். இம்மாவட்டம், தென் மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாகத் திகழ்வதால், இதனை Gateway of Chennai என்றும் அழைக்கலாம்.

செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த 2011 முதல் 2018–ஆம் ஆண்டு வரை 1,313 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 52 பாலப் பணிகள், 1,451 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 1,409 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 215 கி.மீ. நீள சாலைகள், 10 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டில் கொளவாய் ஏரியினை மீட்டு எடுத்து செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் திட்டம், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். செங்கல்பட்டு பகுதிக்கு வெள்ளத் தடுப்புக்கென முதல் கட்டமாக, 104 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, மணிமங்கலம் ஏரி உள்பட 5 ஏரிகளை ஆழப்படுத்தும் பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளன. கீழ்கட்டளை வடிகால்வாயினை 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்து கீழ்கட்டளை, எஸ்.கொளத்தூர், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளில் வெள்ளம் சூழும் அபாயத்தை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2–வது கட்ட நிரந்தரப் பணிகள் 244 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுவீச்சில் துவங்கப்பட உள்ளன.

அது போன்றே 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் பெரிய ஏரியின் கலங்களிலிருந்து மூடிய வெள்ள பெருவடிகாலும், 11.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு மற்றும் வரதராஜபுரம் தாங்கல் ஏரியினை இணைத்து புதிய ஆற்றுப் படுகை நீர்தேக்கம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியினால் 80 மில்லியன் கன அடி வெள்ள நீரினை சேகரிக்க இயலும். மேலும், வெள்ள அபாயம் நீங்கி, விவசாயிகளின் நலன் காக்கப்படுவதுடன், குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிரந்தரமாக வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் பொதுப்பணித் துறை மூலம் 282.79 கோடி ரூபாயில் 52 பணிகளும், நெடுஞ்சாலைத் துறை மூலம் 118.77 கோடி ரூபாயில் 80 பணிகளும், ஊரக வளர்ச்சித் துறை மூலம் 13.41 கோடி ரூபாயில் 121 பணிகளும், பேரூராட்சித் துறை மூலம் 13.88 கோடி ரூபாயில் 55 பணிகளும், நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் 2.25 கோடி ரூபாயில் 6 பணிகளும் என மொத்தம் 431 கோடி ரூபாயில் 314 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடையாறு பகுதியில் ஒரத்தூர் கிளை ஆற்றில் வெள்ள அபாயத்தைக் குறைக்க ஏதுவாக சுமார் 60 கோடி ரூபாய் செலவில் அடையாற்றின் கிளை ஆறான ஒரத்தூர் மடுவின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த நீர்தேக்கத்தை ஒரத்தூர் ஏரி–ஆரம்பாக்கம் ஏரி மற்றும் ஒரத்தூர் அணைக்கட்டுடன் இணைத்து, 1.35 டி.எம்.சி. கொள்ளளவுடன் நீர் தேக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டில் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் **“மெடிபார்க்”** திட்டத்திற்கு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்னும் 6 மாதத்தில் இத்திட்டம் துவங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேறும்பொழுது, அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித் தரும். மேலும், விபத்து மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில், 19.46 கோடி ரூபாய் மதிப்பில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையமும், 3.43 கோடி ரூபாய் மதிப்பிலான கேத்லேப் மையமும், 7 கோடி ரூபாய் மதிப்பிலான எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி உட்பட மொத்தம் 39 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு

பணிகள் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் 8.83 கோடி ரூபாய் செலவில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏறக்குறைய 92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் இந்திய பாரம்பரிய மருத்துவ முறையான யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம் ஒன்றினை அமைத்திட நான் சென்ற வாரம் அடிக்கல் நாட்டினேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்தத் தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தொழில் வளம் நிறைந்த செங்கல்பட்டு மாவட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு அம்மாவின் அரசு தொழில் துறையில் சாதித்த சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

2015–ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினை தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் 3 லட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இதில் 270 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. கையெழுத்து இடப்பட்ட ஒப்பந்தங்களில் இது ஏறக்குறைய 90 சதவிகிதமாகும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,573 தொழில் திட்டங்கள், பணிகளை துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆனால், திரு.ஸ்டாலின் பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்துக் கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறான செய்தியை மக்களிடம் பரப்பி வருகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலக முதலீட்டாளர் மாநாடு என்று ஒரு மாநாட்டை நடத்தி, அதன் மூலம் கோடிக்கணக்கான முதலீடுகளை ஈர்த்துள்ளதாகக் கூறுகின்றீர்கள், எவ்வளவு முதலீடு தமிழகத்திற்கு வந்திருக்கிறது? போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு நடைமுறையில் உள்ளது? என்று கேட்கிறார். அதற்குத் தான் நான் விளக்கமளித்துள்ளேன்.

சமீபத்தில் நான், அமெரிக்கா, இங்கிலாந்து, துபாய் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக சென்றபோது, 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41 நிறுவனங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம்

**35,000**க்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. இதில் **2** திட்டங்களை நான் ஏற்கனவே துவக்கி வைத்துள்ளேன். மேலும், **3** திட்டங்களை நாளை துவக்கி வைக்க உள்ளேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களை வரவேற்கவும், **"யாதும் ஊரே"** என்ற ஓர் புதிய திட்டத்தை கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது நான் அறிவித்திருந்தேன். அதன்படி தமிழ்நாடு அரசின் சார்பில், நானே நேரடியாகச் சென்று, உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைத்திட, ஒரு உறவுப்பாலம் அமைக்கும் இந்த உன்னத முயற்சியை, அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச்சாளர அனுமதி, ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் உயர்மட்டக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீட்டு எளிதாக்குதல் பிரிவு, மின்சார வாகனக் கொள்கை என தொழில் துறை மேம்பட பல திட்டங்களைத் தீட்டி சிறப்புற செயல்படுத்தி வருகிறோம் என்பதை இந்தத் தருணத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தொழில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு இதுவரை நான் **48** வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க சாதகமாக உள்ள மாவட்டங்கள், அம்சங்களை எடுத்துரைத்துள்ளேன். இவற்றுக்கெல்லாம் முக்கியமான காரணம், நமது மாநிலம் தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருவது தான். இவ்வாறு மின்மிகை மாநிலமாக தமிழ்நாடு முன்னேறியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு இன்றைய தினம் அது நிறைவேற்றிக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இது போன்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு சார்பில், இந்த நிகழ்ச்சியில், இன்று பொதுப் பணித் துறையின் சார்பில் **47** கோடி ரூபாய் மதிப்பிலான **3** பணிகள் உட்பட மொத்தம்

**113.93** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **181** பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் **61.69** கோடி ரூபாய் மதிப்பிலான **110** பணிகள் உட்பட மொத்தம் **128** கோடியே **9** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள **213** பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். அதே போல, **8,624** பயனாளிகளுக்கு **67.79** கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அரசின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதையே தொழிலாகக் கொண்ட சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே, மக்கள் பணி ஆற்றுபவர்களுக்கு உரிய பலன் தானாகவே வந்து சேரும். இதைச் சொல்லும் போது, கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. "தகதக" என மின்னும் அந்த தங்கத் தட்டை கோயில் நிர்வாகி ஒருவர் கையில் எடுத்தார். யாருக்கு அந்த தங்கத்தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா? என நிர்வாகிக்கு ஒரு கேள்வி எழுந்தது.

கோயில் நிர்வாகி அந்த தட்டில் ஒரு வாசகத்தை கண்டார். **"அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு"** என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அந்த நிர்வாகி, "நாளைக்கு பகலில் பக்தர்கள் வந்து தாங்கள் செய்த நற்செயல்களை விளக்கிச் சொல்லி, தட்டை பெற்றுக் கொள்ளலாம்", என்று அறிவித்தார். மறுநாள் ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது நற்செயல்களை விவரித்தார்கள். ஒரு பணக்காரர் தன் சொத்தை ஏழைகளுக்கு வாரி வாரி வழங்குவதாகக் கூறினார். உடனே நிர்வாகி, அந்த தட்டை அவரிடம் அளித்தார். "இவர் தானம் செய்தார் என்பதற்கு என்ன சாட்சி?" என்று கோயில் நிர்வாகி நினைக்கும்போதே, அந்தப் பணக்காரரின் கையில் இருந்த தங்கத் தட்டு தகரமாக மாறி விட்டது. "ஓகோ! தகுதியில்லாதவர்கள் கைக்குப்

போனால் தங்கத் தட்டு இப்படி தகரத் தட்டாக மாறிவிடும் போலும்!'' என்று எல்லோரும் அங்கே பேசிக் கொண்டார்கள்.

அந்த ஊருக்கு பணக்காரர்கள் நிறைய பேர் வந்து தாங்கள் செய்த தான தர்மங்களை சொல்லி, தங்கத்தட்டை பெற முயன்றனர். ஆனால் தானம் செய்ததாக சொன்ன பல பணக்காரர்களின் கைகளுக்குப் போன தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறியது. சில நாட்கள் கழித்து, அக்கோயிலுக்கு எளிய மனிதர் ஒருவர் வந்தார். அவருக்கு இந்தத் தங்கத்தட்டு விவரம் எதுவுமே தெரியாது. கோயிலில் சாமி கும்பிட போன அவர், அங்கு அதிக அளவில் ஏழை எளிய மக்களைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். ''இந்த நாட்டில் இவ்வளவு ஏழை மக்களா?'' அந்த ஏழை மக்களில் கை, கால் இழந்தவர்கள், கண் பார்வை இழந்தவர்கள், வாய்பேச முடியாதவர்கள் இருப்பதைப் பார்த்து அவரது உள்ளம் உருகிற்று. அவர் ஆண்டவன் முன் இம்மக்களுக்கு விமோசனம் வேண்டி கோயிலுக்கு சென்றார். அப்பொழுது கூட்ட நெரிசலில் கோயில் நிர்வாகி கையிலிருந்த தங்கத் தட்டை தவற விட்டார். அந்தத் தட்டு கோயிலின் உள்ளே வந்த நல்ல உள்ளம் கொண்ட அந்த எளிய மனிதரின் கையில் விழுந்தது. உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறாமல் ஜொலித்தது. கோயில் நிர்வாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! ''ஐயா! நீங்கள் தான் உண்மையான அன்பின் வடிவம். இந்த தங்கத் தட்டுக்கு உரியவர் நீங்கள்தான்'' என்று கூறினார்.

''**மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்**'', ''**மக்களை நாடி அரசு**'' என்று மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்களுக்காக அன்புள்ளத்துடன் உருகிய அந்த எளியவருக்கு தங்கத் தட்டு கிடைத்தது போல, மக்களுக்காக பணியாற்றும் நமக்கு, மக்கள் தங்கள் பேராதரவின் மூலம் அளித்த இடைத் தேர்தல்கள் வெற்றியைப் போல, வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் வெற்றி எனும் தங்கத்தட்டை அளிப்பார்கள் என்பது உறுதி.

இன்றையதினம் ஸ்டாலின் அவர்கள், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், "உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. அந்த அறிவிப்பில், முறையாக வார்டு வரையறுக்கவில்லை, முறையாக அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முறையாக வார்டு வரையறுக்கப்படவில்லை. முதலமைச்சர் திடீரென்று, நேரடித் தேர்தலை ரத்து செய்து விட்டு வார்டு வாரியாக தேர்தல் நடைபெறும்

என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். இதையெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, திட்டமிட்டு செயல்படுத்தி, தேர்தலை நிறுத்துவதாகத் தெரிகிறது" என்ற ஒரு பச்சைப் பொய்யைத் தெரிவித்திருக்கின்றார்.

**1996–**ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித் தேர்தல், வார்டு வாரியாக நடைபெற்று, அதன் மூலமாகத் தான் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். **1996–**ஆம் ஆண்டு வரை மேயர் பதவிக்கு மறைமுகத் தேர்தல்தான் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நேரடித் தேர்தலை அறிமுகம் செய்தார்கள். அதற்குப் பிறகு **2006–**ஆம் ஆண்டு நேரடியாக நடைபெற்ற தேர்தலை மறைமுகத் தேர்தலாக அறிவித்ததும் அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர், தற்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் தான். அவரே மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக, தெளிவாக சட்டமன்றத்தில் பதிலளித்திருக்கிறார். அப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் **31.8.2006** அன்று மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு பதில், மறைமுகமாக தேர்ந்தெடுக்க சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். **31.8.2006** அன்று திரு.ஸ்டாலின் கூறுகையில், அசாம், குஜராத் என்று பல மாநிலங்களைப் பட்டியலிட்டு அங்கெல்லாம் மறைமுகத் தேர்தல் மூலம் தான் தலைவரை தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றக் கோரினார். மேலும், திரு.ஸ்டாலின் அவர்கள் **31.8.2006** அன்று தீர்மானத்தின் மீது பேசும்போது "மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல், மெஜாரிட்டியாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து, அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையாமல் இருப்பதற்கு இதைக் கொண்டு வருகிறோம்.மேலும், உதாரணத்திற்கு விழுப்புரம், விருத்தாச்சலம் நகராட்சிகளில், **2001** தேர்தல் நடந்ததற்குப் பிறகு இதுவரையில் ஆகஸ்டு **2006** வரை அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்கள் நடைபெறவில்லை, முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது

ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டு தான் இப்பொழுது இந்த முறையை நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம்" என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றித் தரக் கோரியிருந்தார். திரு.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது, வார்டு வாரியாகத் தேர்தல் நடத்துவது சிறப்பாக இருக்கும் என்று அவரே சட்டமன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். எங்களைப் பொறுத்தவரை, வார்டு வாரியாகத் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றோம். இதிலே என்ன தவறு இருக்கின்றது. நீங்கள் தெரிவித்தால் சரி, நாங்கள் அறிவித்தால் அது தவறா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்கள் தானே பேரூராட்சித் தலைவர்களையும், நகர மன்றத் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது? இதில் எந்தத் தவறும் கிடையாது. வேண்டுமென்றே, திட்டமிட்டு இந்தத் தேர்தலை தடை செய்வதற்காக, நிறுத்துவதற்காக திரு.ஸ்டாலின் அவர்கள் பொய்யான குற்றச்சாட்டை சொல்லி வருகின்றார். உண்மையிலே, இந்தத் தேர்தலைக் கண்டு அவர் அஞ்சுகிறார் என்று தான் நான் நினைக்கின்றேன். பல கூட்டங்களிலும், செல்லும் இடங்களிலும், கிராமங்களிலும், , நகரங்களில் பல்வேறு பகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. எனவே, மக்களுக்கு முறையாக தண்ணீர் கிடைக்கவில்லை, கழிவுநீர் அகற்றப்படவில்லை, தெருவிளக்கு எரியவில்லை என்று குற்றச்சாட்டுக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தல் நடத்த அஞ்சுகிறது என்று வீர வசனம் பேசிக் கொண்டிருக்கிறார், திரு.ஸ்டாலின். உள்ளாட்சித் தேர்தலை நடத்த தில் இருக்கிறதா? திராணி இருக்கிறதா? தெம்பு இருக்கிறதா? என்று கேட்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, தில் இருக்கிறது, தெம்பு இருக்கிறது, திராணி இருக்கிறது, துணிவு இருக்கிறது என்று நாங்கள் தெரிவிக்கிறோம். மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவித்தால் அதை எதிர்கொள்ளக்கூடிய வலிமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறோம். நீங்கள் நொண்டிச்சாக்குச் சொல்லிக் கொண்டு நீதிமன்றத்தை நாடப் பார்க்கின்றீர்கள். இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எதுவும் பலிக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்பானது, மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அமைப்பு. அந்த உள்ளாட்சித் தேர்தலை நிறுத்துவதற்குத் தான் இன்றையதினம் வழக்குத் தொடர நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். அதுகுறித்த சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சார்பில் வழக்கறிஞர் அமீத் திவாரி என்பவர் உச்சநீதிமன்றத்தில் **28.11.2019** அன்று உள்ளாட்சித் தேர்தல் தேதி அறிவிப்பை நிறுத்த வேண்டுமென்று இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளார். இன்றையதினம், இதனை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வுக்குச் சென்று, மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார். ஆனால், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள், மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு வரும்பொழுது, விசாரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழக கோரிக்கையை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. அந்த வழக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு அவர் குறிப்பிட்ட காரணம், முற்றிலும் தவறான, பொய்யான காரணம். இந்தத் தேர்தலை சந்திக்க திமுக தலைவர் அஞ்சுகிறார் என்று தான் நான் கருதுகிறேன். அதற்கான விளக்கத்தையும் நான் தருகின்றேன். இந்திய தேர்தல் ஆணையம் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் இனம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. தமிழ்நாட்டில் **1996, 2001, 2006** மற்றும் **2011** ஆகிய வருடங்களில் நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தல்கள் **1991–**ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வரையறுக்கப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலே நடைபெற்றது. **2016–**ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து ஆயத்தப் பணிகளும் நடத்தப்பட்டு வந்த நிலையில், **2011–**ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி வார்டு மறுவரையறை செய்த பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தவுடன், உச்சநீதிமன்றத்தில் திமுக மேல்முறையீடு செய்தது. இன்று வரை இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மாநில தேர்தல் ஆணையம் செப்டம்பர் **2016–**ல் தேர்தல் அறிவிப்பு வெளியிட்டவுடன் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு முறையாக செய்யப்படவில்லை எனவும்,

அட்டவணையில் தேர்தல் நடத்த போதுமான கால அவகாசம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. 1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் கடைபிடிக்கப்பட்ட அதே அட்டவணையின் நடைமுறையின்படி 2016 உள்ளாட்சித் தேர்தல் அட்டவணையும் வெளியிடப்பட்டது என்ற வாதத்தை மாநிலத் தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் எடுத்து வைத்தபொழுதும் அந்தத் தேர்தலை நீதிமன்றம் ரத்து செய்தது. இதன் பின்னர், தமிழ்நாடு அரசு 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்ய ஆணையத்தை அறிவுறுத்தியது. அந்த ஆணையம் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்து ஒவ்வொரு வார்டின் வரைவு அறிக்கையை வெளியிட்டு, பொதுமக்களின் கருத்தையும் கேட்டது. இப்பணி முடிவுற்றப் பிறகு தான் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியான வார்டு மறுவரையறை அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் பின் தமிழ்நாடு அரசு, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான விகிதாச்சாரப்படி இடஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு அனைத்துப் பணிகளையும் முறையாக செய்த பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு வழக்குளைப் தொடுத்து, உள்ளாட்சித் தேர்தலை நடத்த விடாமல் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. புதிதாக மாவட்டங்கள் தொடங்குவதற்கும் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இதற்காக 2018–ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால், அப்பொழுதே திராவிட முன்னேற்றக் கழகம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால், அப்பொழுது செல்லவில்லை. வார்டு வரையறுக்கப்பட்ட பிறகு பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் வார்டு வரையறை செய்ததில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என்ற அறிவிப்பை கொடுத்தன் விளைவாக, எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆட்சேப மனுக்களின் கோரிக்கையை பரிசீலித்து, முறையாக வார்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. இப்படி அனைத்தையும் முறையாக மாநிலத் தேர்தல் ஆணையம் செய்தும், தேர்தலைச் சந்திக்கத் தெம்பில்லாமல், திராணியில்லாமல், துணிவில்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேட்டி

கொடுத்துக் கொண்டிருக்கிறார். மாநிலத் தேர்தல் ஆணையம் கேட்கும் உதவிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக, இந்த அரசு வலு பெற்றிருக்கிறது, உள்ளாட்சி அமைப்பை சிறப்பாக நடத்துவதற்காக இந்தத் தேர்தலை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். கிராமங்களில் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவார்; தூங்குபவரை எழுப்பலாம், தூங்குவது போல் நடிப்பவரை எழுப்ப முடியாது என்று சொல்வார்கள். அதைப் போலத் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இன்று உருவாகும் செங்கல்பட்டு மாவட்டம், பல்வேறு துறைகளிலும் மேலும் சிறந்து விளங்கும் வகையில், சில அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்:-

1. மதுராந்தகம் வட்டம், இரும்புலிச்சேரி கிராமத்திற்கு அருகே பாலாற்றின் குறுக்கே 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால் தடுப்பணையை சுற்றியுள்ள நல்லாத்தூர், பொய்கைநல்லூர், இரும்புலிச்சேரி, புறஞ்சேரி, தண்டரை, நெரும்பூர், அட்டவட்டம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிணறுகளின் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். இதன் மூலம் 1340 ஹெக்டேர் நிலம் பயன்பெறுவதோடு, குடிநீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.
2. திருப்போரூர் வட்டம், பஞ்சன்திருத்தி கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும்.
3. அதேபோல, திருப்போரூர் வட்டம், பண்டிதமேடு கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். மேற்படி பஞ்சன்திருத்தி மற்றும் பண்டிதமேடு தடுப்பணைகளினால் 19 மில்லியன் கன அடி நீர் சேமிக்கப்பட்டு, மானாமதி, புன்னப்பட்டு, அகரம், காரணை ஆகிய கிராமங்களில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, வேளாண் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
4. மதுராந்தகம் வட்டம், செம்பூண்டி கிராமம் அருகே கிளியாற்றின் குறுக்கே 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால்,

இதனைச் சுற்றியுள்ள செம்பூண்டி, பசுவங்கரனை, ஓரத்தூர் ஆகிய கிராமங்கள் பயன் பெறும்.

5. மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை உற்று நோக்குகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசின் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

6. குறுகிய கால அவகாசத்தில் மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பாறை சிற்பங்கள், சிற்ப அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், புலிக்குகை உள்ளிட்ட வரலாற்று சின்னங்களை அனைவரும் கண்டுகளிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை 50 ரூபாய் கட்டணத்தில் இயக்க உள்ளது. இந்தப் பேருந்துப் பயணத்தில் சுற்றுலாப் பயணிகள் மேற்கண்ட நினைவுச் சின்னங்களின் அருகே எங்கு வேண்டுமானாலும் ஏறி, மற்றொரு நினைவுச் சின்னத்தின் அருகில் இறங்கிக் கொள்ளலாம் என்பது சிறப்பு அம்சமாகும்.

7. செங்கல்பட்டு வட்டம் முருகமங்களம் கிராமத்தில் 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் **“அனைவருக்கும் வீடு”** திட்டத்தின் கீழ் 1260 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

8. செங்கல்பட்டு வட்டம், கீரப்பாக்கம் கிராமத்தில் 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் **“அனைவருக்கும் வீடு”** திட்டத்தின் கீழ் 1760 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம், மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மூலமாக, அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில், திராவிட முன்னேற்றக் கழக ஒரு குற்றச்சாட்டைக் கூறியது. ஏற்கனவே, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் இடங்களிலெல்லாம் நீங்கள் மின்னணு வாக்கு இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும் என்று நேற்றையதினம் திமுக

சார்பில் கலந்து கொண்ட திரு.என்.ஆர்.இளங்கோ குறிப்பிட்டிருக்கிறார். 2019–ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன் வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் வரிசை எண்.11–ல் தேர்தல் சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில், வாக்குப் பதிவு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச் சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற முக்கிய சீர்திருத்தங்களை திமுக தொடர்ந்து வலியுறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதுமட்டுமல்ல, 2019–ஆம் ஆண்டு புது தில்லியில் நடத்தப்பட்ட, மக்களவைத் தேர்தலுக்கான அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மரியாதைக்குரிய திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் கலந்து கொண்டு "மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை, வாக்குச்சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துங்கள்" என்று தெரிவித்திருந்தார். நேற்றைய தினம் மாநில தேர்தல் ஆணையத்தால் கூட்டப்பட்ட கூட்டத்தில், வாக்குச் சீட்டுக்கு மின்னணு வாக்கு இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு.என்.ஆர்.இளங்கோ அவர்கள் கூறியுள்ளார். என்ன வேடிக்கை பாருங்கள், தமிழ் நாட்டில் கொள்கையில்லாத ஒரே கட்சி திமுக கட்சி தான்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல பச்சோந்தி அடிக்கடி நிறத்தை மாற்றிக் கொண்டேஇருக்கும். ஆனால், அதைவிட வேகமாக கொள்கையை மாற்றக்கூடிய ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை நான் சொன்ன கருத்திலிருந்து உங்களுக்கு தெள்ளத் தெளிவாக புரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, வேண்டுமென்று திட்டமிட்டு ஏதாவது குழப்பத்தை உருவாக்கி, உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப்போட முயற்சிக்கின்றார், அது நிறைவேறாது. மாநிலத் தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், சரியான முறையில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று எண்ணி, வார்டு வரையறை முழுமையாக செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், புதிய மாவட்டத்தைப் பிரித்ததினால் பிரச்சினை என்று சொன்னார். 2018–ல் வரையறுக்கப்பட்ட அந்த வார்டு முறையைப் பின்பற்றித் தான் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று தெளிவாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, இதில் எந்தக் குழப்பமும் கிடையாது, குழப்பமெல்லாம் திரு.ஸ்டாலினுக்குத் தான் இருக்கிறது, தேர்தல் ஆணையத்திடமும் இல்லை, மற்ற கட்சிகளுக்கும் இல்லை.

இன்றைக்கு தமிழகத்தில் மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே தேங்கி வருவதால் கொசு அதிகமாக உற்பத்தியாகி, மக்களுக்கு மர்மக் காய்ச்சல்கள் வருகிறது. அதிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக அம்மாவினுடைய அரசு ஏழை மக்களுக்கு கொசுவலை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும். நைலான் துணியிலான அற்புதமான கொசுவலையை எங்களுடைய அரசு ஏழை மக்களுக்கு வழங்குமென்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன். அனைத்து மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்று சிலர் கூறினார்கள். அதையும் அரசு விரைவில் பரிசீலிக்கும். தற்போது ஏழை மக்களுக்கு அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எல்லா குடும்பங்களும் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்பதற்காக அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கும் சுமார் 2 கோடியே 5 லட்சம் குடும்பங்களுக்கு பொங்கல் சிறப்புப் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பை வழங்கி, இன்றைக்கு காலை அதை துவக்கி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். தமிழகத்திலே ஏழை, எளிய மக்களின் துன்பங்களைக் களைவது தான் எங்களுடைய லட்சியம், அந்த லட்சியப் பாதையிலே இன்றைக்கு வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில், தமிழகம் குடிசையில்லாத தமிழகமாக உருவாக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டம், ஏரிகள் நிறைந்த இந்த மாவட்டத்தில் தான் முதன்முதலாக நான் குடிமராமத்துத் திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றேன். இதன் மூலமாக, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பயன்பெறுவதற்காக இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமித்து வைக்கும் திட்டம் குடிமராமத்துத் திட்டம்.

அதே போல, தடுப்பணை மூன்றாண்டு கால திட்டமாக ரூ.1,000 கோடி ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதை நிறைவேற்றும் விதமாகத்தான், நான் வந்தவுடன் இங்கே குறும்படம் வாயிலாக அழகாகக் காண்பித்தார்கள். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்த அறிவிப்பை நடைமுறைப்படுத்திய அரசு என்பதை புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தோடு இன்றைக்கு வெளியிட்டு காண்பித்திருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் அரசு தடுப்பணை கட்டியதன் விளைவாக, தடுப்பணைகளிலே நீர்

தேங்கியிருக்கும் காட்சியை நாம் பார்க்கின்றோம். இது மக்களுடைய அரசு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

பல்லாண்டு காலமாக செங்கல்பட்டைச் சேர்ந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டு மாவட்ட நகரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை இன்றைக்கு தொடங்கியிருக்கின்றோம். இந்தப் பகுதி வேளாண் மக்கள் நிறைந்த பகுதி, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இந்த அரசு எப்பொழுதும் இந்த மாவட்டத்திற்குத் துணை நிற்கும் என்று சொல்லி, செங்கல்பட்டு மாவட்டம் உருவாவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களுக்கும், அவருக்குத் துணை நின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் விரைந்து செயல்படுவதற்கு இங்கே இருக்கின்ற பொதுமக்களும், கழக முன்னோடி நிர்வாகிகளும் தொடர்ந்து வலியுறுத்தியதன்பேரில், இன்றைக்கு புதிய மாவட்டம் விரைந்து தொடங்கப்பட்டிருக்கின்றது. இந்த மாவட்டம் அனைத்து வளங்களும் பெற்று சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**